EASTERN UNIVERSITY, SRL LANKA
FACULTY OF COMMERCE & MANAGEMENT
FINAL EXAMINATION IN DIPLOMA IN BUSINESS ADMINISTRATION – 1999/2000 (Nov, 2003)
(EXTRNAL PROGRAMME)
DBA 202 MANAGEMENT INFORMATION SYSTEMS

LIBRARY
31 DEC 2003
Eastern University, Sri Lanka

**Answer any five questions.** **Time:03 hours**

---

**Q1.** (a) "கணினியை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமை"(Computer based Information System) எனும் பதத்தை வரையறுக்க.
(05 புள்ளிகள்)

(b) ஏன் தகவல் முறைமைகள் இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன? அவை எவ்வாறு நிறுவனங்களையும் முகாமைத்துவத்தையும் மாற்றிக்கொண்டிருக்கின்றன என விளக்குக.
(15 புள்ளிகள்)

**Q2.** (a) ஏன் தந்திரோபாயத் தகவல் முறைமைகளை(Strategic Information System) நிர்மாணிப்பதும் அவற்றை தொடர்ந்தும் நிலைக்கச் செய்வதும் கடினமானவை என விளக்குக. (10 புள்ளிகள்)

(b) எவ்வாறு நிறுவனங்கள் தமது செயற்பாடுகள், பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு தகவல் முறைமைகளைப் பயன்படுத்த முடியும் என விபரிக்குக? (10 புள்ளிகள்)

**Q3.** (a) பாரம்பரிய கோவைச் சூழலின்(traditional file environment) பிரச்சினைகளை விளக்குக.
(05 புள்ளிகள்)

(b) எவ்வாறு ஒரு தரவுத்தள முகாமைத்துவ முறைமை(DBMS) தகவல்களை ஒழுங்கமைக்கின்றது என விபரிக்குக. (15 புள்ளிகள்)

**Q4.** (a) "தொலைத்தொடர்பாடல்" மற்றும் "தொலைத்தொடர்பாடல் முறைமை" என்னும் பதங்களில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
(06 புள்ளிகள்)

(b) 'தொலைத்தொடர்பாடல் முறைமை' ஒன்றின் அடிப்படைக் கூறுகளைப் பற்றி விபரிக்குக. (14 புள்ளிகள்)

**Q5.** (a) நிறுவன ரீதியான வலைப்பின்னலின்(enterprise networking)இயல்புகளைப் பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

(b) 'Internet' மற்றும் 'Extranet' ஆகியவற்றின் இயலுமைகளை அடையளம் காண்பதுடன் ஓர் நிறுவனத்திற்கு அவை இரண்டினாலும் கிடைக்கக் கூடிய நன்மைகளை விபரிக்குக. (15 புள்ளிகள்)

**Q6.** (a) முறைமை அபிவிருத்திச் செய்முறையின்(System Development Process) பிரதானமான செயற்பாடுகளை அடையாளம் காண்க. (10 புள்ளிகள்)

(b) தகவல் தொழில்நுட்ப வெளிவாரி மூலங்கள் (IT outsourcing) என்றால் என்ன? எவ்வாறான சந்தர்ப்பத்தில் தகவல் முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கு அதனைப் பயன்படுத்த முடியும்? (10 புள்ளிகள்)

**Q7.** (a) நவீன நிறுவனங்களில் 'அறிவு முகாமைத்துவத்தின்'(Knowledge Management)முக்கியத்துவத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

(b) இன்று தகவல் முறைமைகளை நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றவற்றோடு சம்பந்தப்பட்ட பிரதான முகாமைத்துவச் சவால்கள் எவை? (15 புள்ளிகள்)

**Q8.** (a) தகவல் முறைமைகளுக்கான 'பொதுக்கட்டுப்பாடு' மற்றும் 'பிரயோகக்கட்டுப்பாடு' பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

(b) தகவல் முறைமைகளுக்கான கட்டுப்பாடுகளை அபிவிருத்தி செய்யும் போது கட்டாயமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணிகளை அடையாளம் காண்க. (10 புள்ளிகள்)